## Il 13 gennajo.




**S. Veronica di Milano.**

(† 1497)

gettyimages
Fototeca Storica Nazionale.
639625608

## ஏப்ரல் 26

### *புனித வெரோணிக்கா*

இவள் ஓர் ஏழை குடியானவனுடைய மகள். எழுதப்படிக்க இவளுக்குத் தெரியாது. கன்னியாஸ்திரியாக விரும்பிய இவளுக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஓர் இரவில் இவள் இதனை நினைத்து அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது கிறிஸ்தவர்களின் சகாயியான மரியாள் தோன்றி, "வெரோணிக்கா, உனது பாடங்களைக் கற்க முடியவில்லையே எனக் கவலைப்படாதே. நான் சொல்லப் போகும் மூன்று மிகச் சாதாரண, ஆனால் வெகு முக்கியமான காரியங்களை அறிந்திருந்தால் போதும். முதலாவது பற்றுதல்களின் தூய்மை, அதாவது உனது இருதய நேசம் முழுமையும் கடவுள் மீது மாத்திரமே வைத்திரு. சிருஷ்டியை அவருக்காக நேசி. இரண்டாவது: பிறரது பாவங்களையும் குறைகளையும் கண்டு ஒரு போதும் முணுமுணக்கலாகாது, ஆத்திரம் கொள்ளலாகாது. ஆனால் அவற்றைச் சகித்துக் கொள்ள வேண்டும், அவர்களை மன்னிக்க வேண்டும், அவர்களுக்காக செபிக்க வேண்டும். மூன்றாவது: என்னுடைய திருமகனது பாடுகளையும் மரணத்தையும் பற்றி ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது தியானிக்க வேண்டும்.

தேவதாய் சொன்ன புத்திமதிகளை வெரோணிக்கா மறக்கவில்லை. அவற்றை அனுசரித்தாள். உலகக் கல்வி அவளிடம் இல்லையென்றாலும் மிலான் புனித மார்த்தா மடத்தில் அவள் கன்னியாஸ்திரியாக வாழ்ந்து புனிதையானாள். அவளது கடமை சமையற்கட்டில் தாழ்ந்த வேலைகளைச் செய்வது, மடத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் காலையிலிருந்து இரவு வரை கவனத்துடனும், மகிழ்ச்சியுடனும் வேலை செய்தாள். இந்த சாதாரண வேலைகளை நன்றாகச் செய்து அவள் அர்ச்சியசிஷ்டவரானாள். அன்னை சொன்ன மூன்றாவது புத்திமதியை வெரோணிக்கா மறக்கவில்லை. கிறிஸ்துநாதரது பாடுகளையும் மரணத்தையும் அவள் எப்பொழுதும் தன் கண்முன் வைத்திருந்தாள்.

### சிந்தனை:

எல்லா அவசரங்களிலும் தேவதாயின் உதவியை நாடிச் செல்ல வேண்டும்.

### செபம்:

சிலுவையில் உயிர்விட்ட இயேசுவே, நான் உம்மை நாளுக்கு நாள் அதிகமதிகமாக நேசிக்க உதவி செய்யும்.